# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(28.09.2022 முதல் 02.10.2022 )**

**அறிக்கை எண் 077/2022** **தேதி.27.09.2022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (23.09.2022 முதல் 26.09.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 02.10.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/09 | 24/09 | 25/09 | 26/09 | தேதி | நாள்-1 28/09 | நாள்-2 29/09 | நாள்-3 30/09 | நாள்-4 01/10 | நாள்-5 02/10 |
| 0.0 | 0.0 | 0.0 | 2.6 | மழை (மி.மீ) | 12 | 8 | 0 | 0 | 4 |
| 33 | 33 | 33 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 34 | 35 | 35 | 35 |
| 22 | 22 | 22 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 24 | 24 | 25 | 25 |
| 5 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 8 | 4 | 4 |
| 78 | 78 | 80 | 82 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 63 | 67 | 64 | 64 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 50 | 50 | 50 |
| 19 | 16 | 10 | 15 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 9 | 10 | 12 | 10 | 10 |
| 230 | 200 | 230 | 200 | காற்றுவீசும் திசை | 250 | 260 | 260 | 240 | 240 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (28.092022 முதல் 02.10.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 28-09-2022 | 10 | 10 | 13 | 10 | 11 | 12 | 8 | 11 | 10 | 10 | 13 | 10 | 9 |
| 29-09-2022 | 5 | 7 | 7 | 5 | 6 | 9 | 6 | 5 | 5 | 5 | 9 | 5 | 5 |
| 30-09-2022 | 0 | 2 | 2 | 0 | 0 | 4 | 1 | 0 | 0 | 0 | 4 | 0 | 0 |
| 01-10-2022 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 02-10-2022 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான மழையுடன் காற்றின் வேகம் 9-12 கி.மீ வரை எதிர் பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு மண் ஈரத்தினைப்பொறுத்து நீர்பாசனம் செய்ய வேண்டும். கடந்த வார மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி மானாவாரி கரிசல் நிலங்களை முன்பருவ விதைப்பிற்கு தயார் படுத்தவும். இலேசான தூறலே எதிர்பார்க்கபடுவதால் மானாவாரி மற்றும் இறவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை மற்றும் தானியப்பயிர்களை அறுவடை செய்து வெய்யிலில் காயவைத்து சேமிக்கவும். |
| தென்னை | | போதுமான மழை பெறப்படின் அல்லது ஈரம் இருக்கும் பட்சத்தில் தென்னை தோப்புக்குள் பசுந்தாள் உரங்களை வளர்ப்பதன் மூலம் மண்ணின் ஈரத்தை உயர்த்தலாம். |
| பருத்தி | விதைப்பு | நிலவும் அதிக மண் மற்றும் காற்றின் ஈரப்பதம் காரணமாக பருத்தி செடிகளில் அதிகமான தழை வளர்ச்சியை தடுத்து பூக்களை அதிகப்படுத்த 15 வது இடைக்கணுவுக்கு மேல்உள்ள பகுதியை கிள்ளி விடவும். மேலும் பூ உதிர்வதை தவிர்க்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 மில்லி கிராமை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து நடவு செய்த 60 முதல் 90 வது நாளில் தெளிக்கவும் |
| தக்காளி | நடவு | நிலவும் சதாகமான வானிலையில் தக்காளியில் இலைகோட்டுப்பூச்சியினை கட்டுப்படுத்த 5 சத வேப்பங்கொட்டை சாற்று கரைசலை மழையில்லா நேரங்களில் தெளிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கரும்பு | வளர் பருவம் | கோவை மாவட்டத்தில் மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் முன்பட்ட மற்றும் நடுபட்டங்களில் பயிரிடப்பட்ட கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கட்ட வேண்டும்.<br>வரும் ஐந்து நாட்களில் தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் பின்பட்ட கரும்பிற்கு இரண்டாவது தவணையாக ஒரு ஏக்கருக்கு 85கிலோ யூரியா மற்றும் 25கிலோ பொட்டாஷ் உரம் இட்டு மண் அணைக்க வேண்டும். மண் ஈரத்தினைப்பொறுத்து நீர்பாசனம் செய்ய வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 9-12 கி மீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். |
| கால்நடைகள் | | மாடுகளை குளக்கரைகளில் புதிதாக முளைத்த தாவரங்களை மேய்சலுக்கு விட வேண்டாம். இதனால் வரக்கூடிய துள்ளுமாறி நோயைத் தவிர்க்கலாம்.<br>நிலவும் பருவகால வானிலை கோமாரி நோய் (கால் மற்றும் வாய்ச்சப்பை நோய் ) தாக்குதலுக்கு ஏற்றதாக காணப்படுவதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு அறிவுருத்தப்படுகிறார்கள்.<br>காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் கோழி மற்றும் மாட்டுத்தீவனங்களில் பூஞ்சாண நச்சு பாதிக்க வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் தீவனங்களை பரிசோதித்து நச்சு இல்லா நல்ல தீவனங்களைக் கொடுக்கவும். |

## குறுஞ்செய்தி

- போதுமான மழை பெறப்படின் அல்லது ஈரம் இருக்கும் பட்சத்தில் தென்னை தோப்புக்குள் பசுந்தாள் உரங்களை வளர்ப்பதன் மூலம் மண்ணின் ஈரத்தை உயர்த்தலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**